## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 2: நாமமாயிரம்
## (இடைப் பெண்கள் சிற்றில் சிதைக்க வேண்டா என்று கண்ணனை வேண்டுதல்)

514 * நாமம் ஆயிரம் ஏத்த நின்ற * நாராயணா! நரனே! * உன்னை
மாமி தன் மகனாகப் பெற்றால் * எமக்கு வாதை தவிருமே **
காமன்போதரு காலம் என்று * பங்குனி நாள் கடை பாரித்தோம் *
தீமை செய்யும் சிரீதரா! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 1

515 இன்று முற்றும் முதுகு நோவ * இருந்திழைத்த இச்சிற்றிலை *
நன்றும் கண்ணுற நோக்கி * நாங்கொளும்[1] ஆர்வம் தன்னைத் தணிகிடாய் **
அன்று பாலகனாகி * ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்! *
என்றும் உன்தனக்கு எங்கள் மேல் * இரக்கம் எழாதது எம் பாவமே 2

516 குண்டுநீர் உறை கோளரீ! * மத யானை கோள் விடுத்தாய் * உன்னைக்
கண்டு மாலுறுவோங்களைக் * கடைக் கண்களாலிட்டு வாதியேல் **
வண்டல் நுண்மணல் தெள்ளி * யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டோம் *
தெண்திரைக் கடல் பள்ளியாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 3

517 பெய்யுமா முகில் போல் வண்ணா! * உந்தன் பேச்சும் செய்கையும் * எங்களை
மையல் ஏற்றி மயக்க * உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ? **
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு * உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம் *
செய்ய தாமரைக் கண்ணினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 4

518 வெள்ளை நுண்மணல் கொண்டு * சிற்றில் விசித்திரப்பட * வீதி வாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் * அழித்தியாகிலும் உன்தன் மேல் **
உள்ளம் ஓடி உருகல் அல்லால் * உரோடம் ஒன்றுமிலோம் கண்டாய் *
கள்ள மாதவா! கேசவா! * உன் முகத்தன கண்கள் அல்லவே 5

519 முற்றிலாத பிள்ளைகளோம் * முலை போந்திலாதோமை * நாள் தொறும்
சிற்றில் மேலிட்டுக் கொண்டு * நீ சிறிதுண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம் ** கடலை அடைத்து அரக்கர் குலங்களை * முற்றவும்
செற்று * இலங்கையைப் பூசலாக்கிய சேவகா! * எம்மை வாதியேல் 6

520 பேதம் நன்கறிவார்களோடு * இவை பேசினால் பெரிது இன்சுவை *
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை * நீ நலிந்து என் பயன்? **
ஓதமா கடல் வண்ணா! * உன் மணவாட்டிமாரொடு சூளுறும்[2] *
சேது பந்தம் திருத்தினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 7

521 வட்டவாய்ச் சிறு தூதையோடு * சிறு சுளகும் மணலும் கொண்டு *

---
[1] நாங்களும்
[2] சூழறும்

இட்டமா விளையாடுவோங்களைச் * சிற்றில் ஈடழித்து என் பயன்? **
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் * சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்! *
கட்டியும் கைத்தால் இன்னாமை * அறிதியே கடல் வண்ணனே! 8

522 முற்றத்தூடு புகுந்து * நின் முகம் காட்டிப் புன்முறுவல் செய்து *
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் * சிதைக்கக் கடவையோ? கோவிந்தா! **
முற்ற மண்ணிடம் தாவி * விண்ணுற நீண்டளந்து கொண்டாய்! * எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் * இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்? 9

523 * சீதை வாய் அமுதம் உண்டாய்! * எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று *
வீதி வாய் விளையாடும் * ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை **
வேத வாய்த் தொழிலார்கள் வாழ் * வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன் *
கோதை வாய்த் தமிழ் வல்லவர் * குறைவின்றி வைகுந்தம் சேர்வரே[3] 10

**அடிவரவு:** நாமம் இன்று குண்டு பெய்யும் வெள்ளை முற்றிலாத பேதம் வட்டம் முற்றத்தூடு சீதை கோழி

[3] சேருவரே